No. of Printed Pages : 7

# 3325 (NS)

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

# பகுதி - III — சிறப்புத் தமிழ்
# Part III — Advanced Language — TAMIL

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **மாற்று** விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** இலக்கிய உருவாக்கத்தை இதன் வழியாக அரிஸ்டாட்டில் விளக்குகிறார் :

(அ) இசைவடிவம் (ஆ) காப்பியம்

(இ) நாடகம் (ஈ) இலக்கணம்

**2.** தம் மன்னர் மறைவிற்காகக் குடிமக்கள் வருந்திப் பாடுவதாக அமைந்த துறை :

(அ) இயன்மொழி (ஆ) கையறு நிலை

(இ) செவியறிவுறூஉ (ஈ) பொருண்மொழிக் காஞ்சி

[ திருப்புக

3. பன்னிரு திருமுறைகளை __________ நாயன்மார் பாடியுள்ளனர்.

(அ) 27 (ஆ) 63 (இ) 87 (ஈ) 72

4. சொற்றொடர் நிலை என்பது __________.

(அ) தூது (ஆ) பரணி (இ) கலம்பகம் (ஈ) அந்தாதி

5. பொருந்தாத இணையைக் கண்டறிக.

(அ) பாரதியார் - சந்திரிகை

(ஆ) ஆர். ஷண்முக சுந்தரம் - நாகம்மாள்

(இ) பாமா - ஆனந்தாயி

(ஈ) அ. மாதவையா - பத்மாவதி

6. கதையின் போக்கில் எதிர்காலக் கற்பனைகள் விவரிக்கப்படுவது :

(அ) காட்சித்துணுக்கு முறை (ஆ) முன்னோக்கு முறை

(இ) பின்னோக்கு முறை (ஈ) நனவோடை முறை

7. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள புதினங்களில் அதே பெயரில் திரைப்படமாக எடுக்கப்பட்ட புதினம் :

(அ) தாய் (ஆ) சாயாவனம் (இ) மாறுதல் (ஈ) செம்மீன்

8. புத்தம் வீடு கதையில் வரும் அக்கானி என்பது :

(அ) குடிக்கும் பானம் (ஆ) வீட்டின் ஒரு பகுதி

(இ) பனையேற உதவும் ஒரு கருவி (ஈ) கதாபாத்திரத்தின் பெயர்

9. ஜெயகாந்தனால் எழுதப்படாத நூல் :

(அ) சில நேரங்களில் சில மனிதர்கள் (ஆ) உன்னைப் போல் ஒருவன்

(இ) யாருக்காக அழுதான் (ஈ) தண்ணீர் தண்ணீர்

**10.** கீழுள்ள கூற்றுகளுள் எவை சரியானவை ?

**கூற்று** 1 : சங்க இலக்கியங்களில் குடக்கூத்து எனக் குறிக்கப்படுவது கரகாட்டம்.

**கூற்று** 2 : அலங்கரிக்கப்பட்ட கரகத்தைத் தரையில் வைத்து சுற்றி ஆடுவர்.

(அ) **கூற்று** 1 -ம், 2 -ம் சரி (ஆ) **கூற்று** 1 சரி, 2 தவறு

(இ) **கூற்று** 1 -ம், 2 -ம் தவறு (ஈ) **கூற்று** 1 தவறு, 2 சரி

**11.** லஷ்மியின் ''பெண் மனம்'' என்ற நூல் __________ திரைப்படமாக வந்துள்ளது.

(அ) கூட்டுப்புழுக்கள் (ஆ) சதிலீலாவதி

(இ) இருவர் உள்ளம் (ஈ) காஞ்சனா

**12.** 'வடமொழி, எபிரேயம், கிரேக்கம் ஆகிய மூன்று இலக்கிய மொழிகளில் தமிழ்ச்சொற்கள் கலந்திருக்கின்றன' என்று கூறியவர் :

(அ) ஈராஸ் பாதிரியார் (ஆ) பெர்சிவல்

(இ) ரைஸ்டேவிஸ் (ஈ) மாக்ஸ்முல்லர்

**13.** ''தூண்டல் செய்கைக்குத் துலங்கலாக மொழி வெளிப்படுகிறது'' என்று கூறிய மொழியியல் அறிஞர் :

(அ) பிர்த் (ஆ) சசூர்

(இ) ஃபுளும்பீல்டு (ஈ) மாலினோவ்ஸ்கி

**14.** தென்னக மொழிகளில் தமிழே மூத்தது, முதன்மையானது என நிறுவியவர் :

(அ) எமினோ (ஆ) பாவாணர் (இ) கால்டுவெல் (ஈ) கீற்று

[ திருப்புக

**15.** சொற்கள் பொருளுணர்த்தும் தன்மை குறித்து ஆராய்வது __________.

(அ) ஒலியனியல் (ஆ) தொடரியல்

(இ) உருபனியல் (ஈ) பொருண்மையியல்

**16.** பின்வருவனவற்றுள் இலக்கியம் எனக் குறிப்பிட முடியாததைச் சுட்டுக :

(அ) நாட்டுப்புறப்பாடல் (ஆ) கதை

(இ) கவிதை (ஈ) நாட்குறிப்பு

**17.** 'வானொலியின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் :

(அ) பெஞ்சமின் (ஆ) மார்கோனி

(இ) ஜான் லூகி பெயர்டு (ஈ) எடிசன்

**18.** கீழ்க்கண்டவற்றுள் சடங்குசார் கலையாகவும், பாடல்சார் கலையாகவும், கருவிசார் கலையாகவும் அறியப்படுவது :

(அ) களரி (ஆ) பகல்வேடம் (இ) தெருக்கூத்து (ஈ) இலாவணி

**19.** மொபைல் ஃபோன் என்றழைக்கப்பட்ட முதல் செல்பேசியின் பெயர் :

(அ) சைமன் பர்சனல் கம்யூனிக்கேட்டர்

(ஆ) பிளாக் பெர்ரி 5810

(இ) எரிக்சன் ஆர் 380

(ஈ) டைனா டாக் 8000 எக்ஸ்

**20.** பின்வருவனவற்றுள் செயற்கைமொழி அல்லாதது எது ?

(அ) ஜாவா (ஆ) பைத்தான் (இ) பெர்ல் (ஈ) மாண்டரின்

## பகுதி - II

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். **7x2=14**

**21.** கூடா ஒழுக்கம் என்றால் என்ன ?

**22.** சிறுபஞ்சமூலம் குறிப்பிடும் மூலிகைகள் யாவை ?

**23.** இற்செறிப்பு - விளக்கம் தருக.

**24.** திறன்பேசியில் செய்து முடிக்கும் பணிகளில் நான்கினைச் சுட்டுக.

**25.** குறும்படம் - வரையறை தருக.

**26.** தமிழ்மொழி வழங்கும் நிலப்பரப்பு குறித்துத் தொல்காப்பியம் கூறுவது யாது ?

**27.** சூழல் கோட்பாடு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**28.** நேயர் கடிதங்கள் - குறிப்பு வரைக.

**29.** மின்னணு செய்தி சேகரிப்பு வாகனம் என்றால் என்ன ?

**30.** சாகித்ய அகாதெமி விருது பெற்ற புதினங்களுள் எவையேனும் நான்கைக் குறிப்பிடுக.

[ திருப்புக

## பகுதி - III

**குறிப்பு :** பின்வருவனவற்றுள் **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்க வேண்டும். **7x3=21**

**31.** ஓரையாடுதல் - குறிப்பு வரைக.

**32.** கலம்பகம் - சிறு குறிப்பு வரைக.

**33.** கதை நிகழ்விடமும் காலமும் குறித்து நீவிர் அறிவன யாவை ?

**34.** பரிக்ஷா நாடகக்குழு - விவரிக்க.

**35.** காட்சி என்றால் என்ன ? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

**36.** வேர்ச்சொல் ஆய்வின் தோற்றம் பற்றி எழுதுக.

**37.** தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் இலக்கிய நிகழ்ச்சிகளுள் எவையேனும் ஐந்தினைக் கூறி விளக்குக.

**38.** செல்பேசிகளில் காணப்படும் வன்பொருள் கூறுகளைப் பட்டியலிடுக.

**39.** உணர்வு பகுப்பாய்வுக்கான தேவை குறித்து எழுதுக.

**40.** திறனாய்வாளர் பெற்றிருக்க வேண்டிய தகுதிகள் யாவை ?

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**41.** (அ) இரட்டைக் காப்பியங்கள் யாவை ? அவை பற்றி விளக்குக.

**அல்லது**

(ஆ) சங்ககால வணிகம் சிறந்திருந்தது என்பதை பட்டினப்பாலை வழிநின்று விளக்குக.

**42.** (அ) நவீன நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விவரிக்க.

**அல்லது**

(ஆ) தமிழ்த்திரைப்பட வரலாறு பற்றி நீவிர் அறிவன யாவை ?

**43.** (அ) திரைப்பட தயாரிப்பில் கலைநுட்பங்கள் எவ்வாறு முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பதை நிறுவுக.

**அல்லது**

(ஆ) புதினம் எழுதும் உத்திகளை வகைப்படுத்துக.

**44.** (அ) திறனாய்வு வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) 'சாரல்' என்னும் சொல் எவ்வாறெல்லாம் திரிந்து வழங்கியது என்பதை விளக்குக.

**45.** (அ) வானொலி உரைச்சித்திரம் குறித்து விரிவாக எழுதுக.

**அல்லது**

(ஆ) ஊடகச் சட்டங்களுள் எவையேனும் ஐந்து சட்டங்கள் குறித்து எழுதுக.

**46.** (அ) கல்மரம் புதினத்தில் சுசீலா கட்டடத் தொழிலாளர்களின் மறுவாழ்வுக்கு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) வந்திருந்த விருந்தாளிகளை அவர்கள் அறியாதபடி கூர்ந்து நோக்கி, தாய் தனக்குத் தானே எவ்வாறு மதிப்பிட்டாள் ?

**47.** (அ) செயலிகளின் வரலாற்றை சுருக்கி வரைக.

**அல்லது**

(ஆ) மின்னூலின் சிறப்பு அம்சங்களைப் பட்டியலிடுக.

**- o O o -**